செ.வெ.எண்: 634/2018 நாள்: 12.11.2018

**திருவண்ணாமலை திருக்கார்த்திகை தீபத்திருவிழா - 2018**
**துணிப்பை, சணல்பை, சுற்றுச்சூழலுக்கு உகந்த தூக்கு பைகள் கொண்டு வரும் பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அதிர்ஷ்ட முறையில் 2 கிராம் தங்கம் மற்றும் 10 கிராம் வெள்ளி நாணயங்கள் பரிசு…**

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில் திருக்கார்த்திகை திருவிழா ஒவ்வொரு வருடமும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த வருடமும் வரும் 23.11.2018 (வெள்ளிக்கிழமை) அன்று கார்த்திகை தீபத் திருவிழா பரண தீபம் மற்றும் மகா தீபம் தரிசணம் நடைபெற உள்ளது. இத்திருவிழாவிற்கு வரும் பக்தர்கள், தங்களது பூஜை சாமான்களை கொண்டு செல்லவும், பிற திண்பண்டங்கள், விளையாட்டு சாமான்களை தங்களது இடங்களுக்கு எடுத்து செல்லவும் பிளாஸ்டிக் கேரிபைகளை பயன்படுத்துவது பொதுவான நடைமுறையில் உள்ளது. அவ்வாறு பயன்படுத்தப்படும் பெரும்பாலான பிளாஸ்டிக் கேரிபைகள், கொண்டு செல்லும் வழியிலேயே கிழிந்து குப்பையாக மாறி கிரிவலப் பாதையிலும், திருவண்ணாமலையில் பிற இடங்களிலும் வீசப்பட்டு வருகின்றன.

இவ்வாறு உருவாகும் பிளாஸ்டிக் குப்பைகளை தவிர்க்கவும், பொதுமக்கள் பிளாஸ்டிக் கேரிபைகளுக்கு மாற்றாக துணிப்பை, சணல்பை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பிற தூக்கு பைகளை வரும் கார்த்திகை தீபத் திருவிழாவின் போது பயன்படுத்த ஊக்குவிக்கவும் திருவண்ணாமலை மாவட்ட நிர்வாகமும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமும் திட்டமிட்டு உள்ளன. மேலும், தமிழ்நாடு அரசானது தனது அரசாணை எண். 84, தேதி 25.06.2018 வாயிலாக ஒரு முறை உபயோகித்து தூக்கி எறியப்படும் அனைத்து வகையான பிளாஸ்டிக்கிற்கும் 01.01.2019 முதல் தடை விதித்துள்ளது. இதன்படி, கார்த்திகை தீபத் திருவிழாவிற்கு துணிப்பை, சணல்பை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பிற தூக்கு பைகளை எடுத்து வரும் பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அதிர்ஷ்ட முறையில் தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள் வழங்கப்பட உள்ளன. திண்டிவனம் சாலை கிரேஸ் மருத்துவமனை வாயில், குபேரலிங்கம் மற்றும் வேலூர் பிரிவு சாலை அண்ணா வளைவு என மூன்று இடங்களில் அமைக்கப்பட உள்ள சிறப்பு பிளாஸ்டிக் தவிர்ப்பு மையய்குளில் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் தாங்கள் கொண்டு வரும் ஒவ்வொரு துணிப்பை, சணல்பை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பிற தூக்கு பைகளை காண்பித்து அதில் சீக்கரம் அழியாத மையினால் '1' என குறிபிடப்பட்ட பின்பு வரிசை எண்ணுடன் கூடிய சீட்டினை பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு 3 இடங்களிலும் ஒவ்டிவாரு மணி நேரத்திற்கும் வழங்கப்படும் சீட்டுகளை சேர்த்து கணினி முறையில் 3 அதிர்ஷ்ட நபர்கள் தேர்வு செய்யப்பட்டு 10 கிராம் வெள்ளி நாணயம் பரிசாக வழங்கப்படும். மேலும் 3 இடங்களிலும் ஒவ்வொரு 4 மணி நேரத்திற்கும் வழங்கப்படும் சீட்டுகளை சேர்த்து ஒரு சிறப்பு அதிர்ஷ்ட நபர் தெரிவு செய்யப்பட்டு 2 கிராம்

தங்க நாணயம் பரிசாக வழங்கப்படும். அவ்வாறு தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு அவர்களின் அலைபேசி வாயிலாக தகவல் தெரிவிக்கப்படும். தேர்வு செய்யப்படும் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் திருவண்ணாமலை பேருந்து நிலையத்திற்குள் அமைந்துள்ள திருவண்ணாமலை நகராட்சியின் பொது சுகாதார பிரிவு அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ள சிறப்பு பரிசு வழங்கும் மையத்தில் தங்களிடமுள்ள அதிர்ஷ்ட சீட்டினை ஒப்படைத்து உரிய அடையாள சான்றினை காண்பித்து தங்களுக்குரிய தங்கம் அல்லது வெள்ளி நாணயத்தினை பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது. கார்த்திகை தீபத் திருவிழா நடைபெற உள்ள 23.11.2018 (வெள்ளிக்கிழமை) முதல் நாள் மாலை 06.00 மணிக்கு (22.11.2018 வியாழக்கிழமை) துவங்கப்படும் இத்திட்டத்தில் மறுநாள் 23.11.2018 மாலை 06.00 மணி வரை தொடர்ச்சியாக 24 மணி நேரத்திற்கு அதிர்ஷ்ட சீட்டுகள் வழங்கப்படும். இத்திட்டத்தில் மொத்தம் தலா 10 கிராம் எடையுள்ள 72 வெள்ளி நாணயங்களும், தலா 2 கிராம் எடையுள்ள 6 தங்க நாணயங்களும் வழங்கப்படும்.

இத்திட்டம் குறித்தான விரிப்புணர்வினை ஏற்படுத்த 2000 பசை ஒட்டிகள் (Sticker) தயாரிக்கப்பட்டு அவை பொதுமக்கள் பயன்படுத்தும் பேருந்துகள், சிற்றுந்துகள், அரசு அலுவலகங்கள் மற்றும் வாடகை வாகனங்களில் ஒட்டப்பட உள்ளன. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கார்த்திகை தீபத் திருவிழாவிற்கு வரும் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் தங்களது துணிப்பை, சணல்பை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த தூக்கு பையுடன் வருகை புரிந்து இத்திட்டத்தில் பங்கு கொள்ளுமாறும், திருவண்ணாமலையின் சுற்றுச்சூழலை தொடர்ந்து பாதுகாக்க முழுமையான ஆதரவு தருமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.க.சு.கந்தசாமி, இ.ஆ.ப. அவர்களால் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**